


**02. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கையை 234 வெளி மாநில தேர்தல் பார்வையாளர்கள் பார்வையிட உள்ளனர்.

2. மேற்குவங்க மாநிலத்தில் 15 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவு இன்று அமைதியாக நடைபெற்று வருகிறது.

3. பெட்ரோலிய பொருட்களின் தடையற்ற விநியோகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

4. இளநிலை மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் நுழைவு தேர்வு நாளை நடைபெறுவதை ஒட்டி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இண்டியன்ஸை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

தேர்தல் வாக்கு எண்ணிக்கை

தமிழகம் கேரளம், அசாம், மேற்குவங்க மாநிலங்கள், புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை மறுநாள் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலில் தபால் வாக்குகளும் அதனை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்பட உள்ளன.

5 மாநில தேர்தல் முடிவுகளை மக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ள results.eci.gov.in என்ற இணையதள முகவரியை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளை ECI NET மற்றும் Voter Help Line கைபேசி செயலி மூலம் காலை 8 மணி தொடங்கி உடனுக்குடன் தெரிந்துகொள்ளவும் தேர்தல் ஆணையம் சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதனிடையே தமிழகத்தின் வாக்கு எண்ணிக்கையை 234 வெளி மாநில தேர்தல் பார்வையாளர்கள் பார்வையிட உள்ளனர்.

இவர்கள் அனைவரும் இன்று தமிழகம் வருகின்றனர்.

வாக்கு எண்ணும் மையங்களில் அங்கீகரிக்கப்படாத நபர்கள் நுழைவதை தடுக்கும் வகையில் முதல்முறையாக QR Code அடையாள அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

QR Code அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே வாக்கு எண்ணும் மையங்களுக்குள் அனுமதிக்கப்படுவர்.

திருச்சி மாவட்டத்தில் வாக்கு எண்ணும் பணிகளுக்காக, நுண் பாா்வையாளர்கள், உதவியாளர்கள் தலா 17 பேர் வீதம் 9 தொகுதிகளுக்கும் 459 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் 62 வாக்கு எண்ணும் மையங்கள் உட்பட 5 மாநில வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்பிற்கும், இணையதளம் வாயிலான தீவிர கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களை அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் முழுவீச்சில் ஆய்வு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொண்டுள்ளனர்.

மாநில தலைமை தேர்தல் அதிகாாி திருமதி அர்ச்சனா பட்நாயக் மாவட்ட தேர்தல் அலுவலர்களுடன் வாக்கு எண்ணும் மையங்களின் தயாா்நிலை, பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை குறித்து தொடர்ந்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறாா்.

இதனிடையே மேற்குவங்க மாநிலத்தில் மஹர்கட், டைமன் ஹாா்பர், தொகுதிக்குட்பட்ட 15 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும் சுமூகமாக நடைபெற்று வருகிறது.

************

தேர்தல் - உச்சநீதி மன்றம்

சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது, வாக்கு எண்ணும் பாாா்வையாளர்களாக மத்திய அரசு ஊழியர்களை மட்டுமே நியமனம் செய்ய உத்தேசித்துள்ள தேர்தல் ஆணையத்தின் முடிவில் தலையிட உச்சநீதிமன்றம் மறுப்பு தொிவித்துள்ளது.

இதுதொடர்பான திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மனுவை விசாாித்த நீதிபதி எஸ். பி. எஸ். நரசிம்மா தலைமையிலான அமர்வு தேர்தல் ஆணையத்தின் நெறிமுறைகள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

வாக்கு எண்ணும் அலுவலர்களை தேர்ந்தெடுப்பது தேர்தல் ஆணையத்தின் உாிமை என்று கூறியுள்ள நீதிமன்றம், வாக்கு எண்ணப்படும் ஒவ்வொரு மேஜையிலும் ஏற்கனவே முகவர்கள், கண்காணிப்பாளர்கள், தேர்தல் பாாா்வையாளர்கள் உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கை கட்டாயம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது.

************

போாிடர் ஒலி

போாிடர்களின்போது நாட்டு மக்களை கைபேசி மூலம் எச்சாிக்கும் புதிய தொழில்நுட்ப முறையை மத்திய அரசு இன்று அறிமுகம் செய்துள்ளது.

உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தொழில்நுட்பத்தின் மூலம் சோதனை ரீதியாக

கைபேசிகளுக்கு எச்சாிக்கை சமிங்கை ஒலி இன்று அனுப்பபப்படுகிறது.

இத்தகைய எச்சாிக்கை செய்தியை கைபேசியில் மக்கள் பெறும்போது பீதியடைய தேவையில்லை என்றும் இது ஒரு சோதனை முறையே என்றும் மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிா் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளாா்.

எதிா்காலங்களில் இந்நடைமுறையை பயன்படுத்தியே உள்ளூர் மொழிகளில் போாிடர் அல்லது அவசர காலம் குறித்த உடனடி எச்சாிக்கை அனுப்பப்படும் என்றும் அவர் தொிவித்துள்ளாா்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான முக்கியமான நடவடிக்கை இது என்று கூறியுள்ள அமைச்சர், போாிடர்களின் போது துரித தகவல்கள் பாிமாற்றத்தை இது இப்புதிய முறை உறுதி செய்வதாகவும் எடுத்துரைத்தாா்.

தேசிய போாிடர் மேலாண்மை ஆணையமும் தொலைதொடர்பு துறையும் இணைந்து இந்த புதிய ஒலிபரப்பு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

************

பிரல்ஹாத் ஜோஷி

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எாிவாயு விலை உயர்விற்கு மேற்காசிய சூழலே காரணமாகும் என்று மத்திய நுகர்வோா் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளாா்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேற்காசிய நெருக்கடியை தொடர்ந்து சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகாித்து வருவதை சுட்டிக்காட்டினாா்.

அதேவேளையில் பெட்ரோல் டீசல் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான சமையல் எாிவாயு விலை உயர்த்தப்படவில்லை என்று கூறிய அவர், பெட்ரோலிய பொருட்களின் தடையற்ற விநியோகத்தை மத்திய அரசு உறுதி செய்து வருவதாக எடுத்துரைத்தாா்.

************

ஓம்.பிா்லா

2026-27-ம் ஆண்டிற்கான நான்கு நாடாளுமன்ற குழுக்களை மாற்றியமைத்து மக்களவை தலைவர் திரு.ஓம்.பிா்லா உத்தரவு பிறப்பித்துள்ளாா்.

இதன்படி நாடாளுமன்ற மதிப்பீட்டு குழு தலைவராக பிஜேபியின் டாக்டர் சஞ்சய் ஜெய்ஸ்வால்,

நாடாளுமன்ற பொது பணிகள் ஆய்வு குழு தலைவராக பிஜேபி உறுப்பினர் திரு. பைஜெயந்த் பாண்டா,

பொது கணக்கு குழு தலைவராக காங்கிரஸ் கட்சியின் கே.சி.வேணுகோபால்,

ஷெட்டியூல்டு மற்றும் பழங்குடியின விவகாரங்களுக்கான குழுவின் தலைவராக பிஜேபி உறுப்பினர் திரு. ஃபஹன் சிங் ஆகியோா் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக மாற்றியமைக்கப்பட்டுள்ள இந்த நான்கு குழுக்களின் காலவரையறை அடுத்த ஆண்டு இறுதிவரை செயல்பாட்டில் இருக்கும்.

************

நீட் நுழைவு தேர்வு

இளநிலை மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் நுழைவு தேர்வு நாளை நடைபெறுகிறது.

நாடுமுழுவதும் தமிழ் ஆங்கிலம் ஹிந்தி உட்பட 13 மொழிகளில் நடைபெறும் இத்தேர்வை 22 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் எழுதுகின்றனர்.

தமிழகத்தில் திருச்சி மதுரை கோவை உட்பட 30 நகரங்களில் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணிவரை இத்தேர்வு நடைபெறுகிறது.

இதனிடையே தமிழகத்தில் நீட் தேர்வெழுதும் மாணாக்கருக்கு மன உறுதி, மன நல ஆலோசனைகள் தொலைபேசி வழியாக வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியா மட்டுமல்லாமல் துபாய், அபுதாபி, தோஹா, ஓமன், ரியாத், சிங்கப்பூர் உள்ளிட்ட 14 இடங்களிலும் நீட் தேர்வு நடைபெறுகிறது.

************

வர்த்தக அமைப்பு

திருவாரூரில் வரும் 5ஆம் தேதி வணிகர் சங்கங்களின் பெரும் மாநாடு நடைபெற உள்ளதால் மயிலாடுதுறையில் அன்றைய தினம் பிற்பகல்முதல், வணிக நிறுவனங்கள்

செயல்படாது என்று அம்மாவட்டத்தின் வர்த்தக அமைப்பு தொ◌ிவித்துள்ளது.

அத்தியாவசிய பொருட்களான மருந்து கடைகள் உள்ளிட்டவை மட்டுமே திறக்கப்படும் என்றும் இந்த அமைப்பு கூறியுள்ளது.

வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்வு, தொழில்துறைக்கு பாதிப்பு ஏற்படுத்துவதோடு, அத்தியாவசிய பொருட்களின் விலை ஏறவும் வாய்ப்பு ஏற்படுத்தும் என்றும் இந்த அமைப்பு எச்சா◌ித்துள்ளது.

தமிழகத்தில் அமைய உள்ள புதிய அரசு மத்திய அரசுடன் உரிய பேச்சுவா◌ா◌்த்தை நடத்தி உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வர்த்தக அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

************

கொடைக்கானல்

கொடைக்கானல் சுற்றுலா தளங்களான தூண்பாறை, குணா குகை, பைன்மரக்காடுகள் மற்றும் மோயர் சதுக்கத்திற்கு இன்றும் நாளையும் கட்டணமின்றி சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறா◌ா◌்.

வாய்ஸ்

************

தஞ்சை – வாய்ஸ்

முருகப்பெருமானின் நான்காம் படை வீடான சுவாமி மலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி ஆலய சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

……… வாய்ஸ் ………

************

திருச்செந்தூர் - வாய்ஸ்

திருச்செந்தூர் கடற்கரையில் 70 அடி தூரத்திற்கு கடல் உள்வாங்கியதால் பக்தர்கள் பாதுகாப்பாக நீராட கோவில் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

……… வாய்ஸ் ……..

************

மதுரை கோவில்

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில் சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான மண்டுக முனிவருக்கு சாப விமோசனம் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறுகிறது.

இதற்காக வண்டியூர் வீரராகவபெருமாள் திருக்கோவிலிலிருந்து சேஷ வாகனத்தில் எழுந்தருளிய கள்ளழகரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

************

கிாிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிாிக்கெட் போட்டியில் சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இண்டியன்ஸை எதிா்கொள்கிறது.

போட்டியில் தொடர வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கும் நிலையில் இன்றைய ஆட்டத்தை ரசிகர்கள் ஆவலுடன் எதிா்நோக்கி உள்ளனர்.

************

கால்பந்து

சீனாவில் நடைபெறும் 17 வயதிற்குட்பட்டோருக்கான மகளிா் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிா்கொள்கிறது.

************

பேட்மிண்டன்

டென்மாா்க்கில் நடைபெறும் தாமஸ் கோப்பை பேட்மிண்டன் ஆடவர் குழு அரையிறுதி போட்டியில் இந்தியா இன்று ஃபிரான்ஸை எதிா்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது